பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 08 2026 FRIDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** நேபாள வெள்ளத்தில் சிக்கிய தமிழகத்தை சேர்ந்த **21** பேர் மீட்கப்பட்டு தில்லி அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

**2)** சர்க்கரை போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும், பற்றாக்குறை இல்லை என்றும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3)** மின்சார பேருந்துகளின் இயக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

**4)** தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக தவெக அரசு அறிவிக்க வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.

**5)** உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

- இனி விரிவான செய்திகள் -

<<<<<<<<>>>>>>>

நேபாள வெள்ளத்தில் சிக்கிய தமிழகத்தை சேர்ந்த **21** பேர் மீட்கப்பட்டு தில்லி அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் தமிழில் இதனை பதிவு செய்துள்ள அவர், விமான நிலையத்தில் 21 பேரை வரவேற்றதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த மீட்பு நடவடிக்கையை மேற்கொண்ட நேபாள ராணுவம் மற்றும் அந்நாட்டு அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கான ஒருங்கிணைப்புப்பணிகளை மேற்கொண்ட நேபாளத்தில் உள்ள இந்திய தூதரகத்தின் செயல்பாடுகள் பாராட்டுதலுக்குரியது என்றும் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே, மீட்கப்பட்ட தமிழர்கள் 21 பேரும் ஆரோக்கியத்துடன் உள்ளதாக மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

*(Sound Byte — ராஜ்மோகன் - 46 Sec.)*

முன்னதாக, நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்களை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து தமிழக அமைச்சர்கள் குழுவிடம், வெளியுறவுத்துறை செயலர் திரு விக்ரம் மிஸ்ரி எடுத்துரைத்தார்.

இதனைத்தொடர்ந்து, திரு ஆதவ் அர்ஜுனா தலைமையிலான அமைச்சர்கள் குழு, வெளியுறவுத்துறை அமைச்சகத்தில் 24

மணிநேரமும் செயல்பட்டுவரும் கட்டுப்பாட்டு அறையையும் பார்வையிட்டனர்.

<<<<<<<<>>>>>>>

சர்க்கரை போதிய அளவில் கையிருப்பில் உள்ளதாகவும், பற்றாக்குறை இல்லை என்றும் மத்திய அரசு கூறியுள்ளது.

சர்க்கரை விநியோகம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் காரணமாக கரும்பு ஆலைகளில் சர்க்கரை விலை 20 சதவீதம் குறைந்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில்லரை விற்பனையிலும் சர்க்கரை விலை விரைவில் குறையத் தொடங்கும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

தமிழக முதலமைச்சர் திரு விஜய், புழல் மத்திய சிறையில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

சிறைவாசிகளுக்கான அடிப்படை வசதிகளை முதலமைச்சர் ஆய்வு செய்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

சிறைவாசிகளுக்கான தொழிற்கூடத்திற்கு சென்று அங்கு தயாரிக்கப்படும் பல்வேறு பொருட்கள் மற்றும் தையல் பிரிவினையும் முதலமைச்சர் பார்வையிட்டதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறைவாசிகளின் தேவைகள் குறித்தும் திரு விஜய் அவர்களிடம் கேட்டறிந்தார்.

இதன்பின்னர் புழல் காவல்நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும் முதலமைச்சர் ஆய்வு மேற்கொண்டதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

மின்சார பேருந்துகளின் இயக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படும் என்று போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு விஜய் தமிழன் பார்த்திபன் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

டீசல் வாகனங்களின் இயக்கத்தால் காற்று மாசு ஏற்படுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக, அரசு பேருந்துகள் மின் பேருந்துகளாகவும், இயற்கை எரிவாயு பேருந்துகளாகவும் மாற்றப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

அனைத்து பேருந்துகளையும். குளிர்சாதன வசதியுடன் கூடிய பேருந்துகளாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திரு விஜய் தமிழன் பார்த்திபன் தெரிவித்தார்.

<<<<<<<<>>>>>>>

தமிழகத்தை வறட்சி பாதித்த மாநிலமாக தவெக அரசு அறிவிக்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தில் உள்ள 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நீர்நிலைகளில் 29 சதவீதம் முற்றிலுமாக வறண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட நீர்நிலைகளில் 25 சதவீதம் வரைதான் நீர் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு, வறட்சி பாதித்த மாநிலமாக தமிழகத்தை அறிவித்து விவசாயிகளுக்கு உரிய இழப்பீட்டினை தவெக அரசு வழங்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>

ஆணவ படுகொலையை தடுக்க விரைவில் சிறப்புச்சட்டம் கொண்டுவரப்படும் என்ற தவெக அரசின் அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சமூக நீதித்துறை அமைச்சர் இதற்கான அறிவிப்பினை சட்டப்பேரவையில் வெளியிட்டதை சுட்டிக்காட்டியுள்ளார்.

கலப்பு திருமணம் செய்துகொண்டவர்களின் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் தனி இடஒதுக்கீடு வழங்கவும் தவெக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரு வீரபாண்டியன் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<<<<>>>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 47 Sec.)***

<<<<<<<<<>>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடி மாநகராட்சியில் மழை நீர் தேங்காமல் வெளியேற்றப்படுவதற்கு ஏதுவாக 16 மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மேயர் திரு ஜெகன் பெரியசாமி கூறியுள்ளார்.

------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கான பயிர்க்கடன் உதவிகளை ஆட்சியர் திருமதி சினேகா இன்று வழங்கினார்.

-------------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பு மருந்து முகாமினை ஆட்சியர் திரு தினேஷ்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

--------------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் தனியார் நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நிதியின்கீழ் செயல்படுத்தப்படும் பெண்களுக்கான கல்வித்திட்டம் குறித்த கலந்தாய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி வந்தனா கார்க் தலைமையில் இன்று நடைபெற்றது.

------------------

திருப்பூர் மாவட்டம் பல்லடத்தில் கள்ள நோட்டை பயன்படுத்தியது தொடர்பாக மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

-------------------

சென்னை எழும்பூர் அஞ்சலக கோட்ட அலுவலகத்தில் குறைதீர் முகாம் அடுத்த மாதம் **3-**ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியா, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் **Daegu-**வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் நீளம் தாண்டுதல் பிரிவில் **Jacob Muttappillil Joseph-**ம், மகளிர் ஈட்டி எறிதலில் வெங்கட சுப்புலட்சுமியும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

-------------

**Lagos** சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Surya Charishma Tamiri** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **21-13, 21-18** என்ற செட் கணக்கில், ஐக்கிய அரபு எமிரேட்சின் **Nurani Ratu Azzahra** -வை வென்றார்.

----------------

செக் குடியரசில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee** இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், **11-7, 12-14, 10-12, 13-11, 11-7** என்ற செட் கணக்கில், ஸ்லோவேக்கியாவின் **Lubomir Pistej**-வை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் **Ankur Bhattacharjee — Akash Paul** இணையும் இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

-----------------

மலேசியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்ச் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **11-4, 11-13, 11-5, 11-5** என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Shafiq Kamal Mohammed-**ஐ வென்றார்.

-----------------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Arnav Paparkar** — தாய்லாந்தின் **Kunanan Pantaratorn** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-3, 6-3** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Safir Azam** — **Navneet Raghuram** இணையை வென்றது.

---------------

**Slovakia** ஓபன் செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Leon Luke Mendonca** நான்கு புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

-----------------

உலகக்கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியா — பெல்ஜியம் இடையேயான ஏழாவது இடத்திற்கான ஆட்டம் இன்று பெல்ஜியத்தில் நடைபெறவுள்ளது.

-------

ஆசியக்கோப்பை மகளிர் டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டி இன்று துபாயில் தொடங்குகிறது.

**<<<<<<<<END>>>>>>>**